# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 13 | வெள்ளிக்கிழமை 28.03.2025 | கதிர் 164







# பிரித்தானியாவின் தடையை வைத்து அரசியல் செய்ய எதிர்க்கட்சி முயற்சி!



## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 28

“பிரிட்டனின் தடை விவகாரத்தின் பின்னணியில் புலம்பெயர் புலி ஆதரவாளர்கள் உள்ளனரா என்பது பற்றியும் ஆராயப்பட்டுவருகின்றது.” - என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

“பிரிட்டனின் தடையின் பின்னால் இலங்கை பின்னணிகொண்ட கனடா அமைச்சர் ஒருவரும் இருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது. எனவே, இது புலி ஆதரவாளர்களால் செய்யப்பட்ட நடவடிக்கையென கருதுகின்றீர்களா?” என எழுப்பப்பட்ட கேள்விக்குப

7

## மனித உரிமைகளை அப்பட்டமாக மீறிய நாடுதான் பிரிட்டன்

# போலிக் குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் இலங்கைக்கு எதிராகக் கூட தடை வரும்

## இப்படிச் சொல்கின்றார் வசந்த கரன்னாகொட



கொழும்பு, மார்ச் 28

“உலகிலேயே மனித உரிமைகளை அப்பட்டமாக மீறிய நாடுதான் பிரிட்டன். எமக்கு எதிரான பிரிட்டனின் தடை அநீதியானது.” - என்று இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட தெரிவித்துள்ளார்.

பிரிட்டனால் தனக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்பில் ஊடகமொன்றிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

7

# மோடியின் இலங்கை விஜயம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

## இந்திய வெளிவிவகார அமைச்சு அறிக்கை



கொழும்பு, மார்ச் 28

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கின்றார் என்றும், 6 ஆம் திகதி வரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு அறிக்கையூடாக அறிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது, இந்தியப் பிரதமர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய

7

# நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான வழக்கு விசாரணை ஏப்ரல் 1 வரை ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 28

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பான வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் கட்சி, ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் வெவ்வேறு மாவட்டங்களில் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராசா, மஹிந்த சமயவர்தன மற்றும்

7

# சந்தேகநபரை அடையாளம் காட்டிய பெண் வைத்தியர்

கொழும்பு, மார்ச் 28

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரான முன்னாள் இராணுவச்சிப்பாய் அடையாள அணிவகுப்பின்போது சம்பந்தப்பட்ட வைத்தியரால் அடையாளம்காணப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான

7

# வவுனியாவில் தனது உறவினருக்கு வாக்களிக்குமாறு பெண் கிராம அலுவலர் வற்புறுத்து எனக் குற்றச்சாட்டு

வவுனியா, மார்ச் 28

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்ட பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர் ஒருவர் தான் கடமையாற்றும் கிராமத்தில் போட்டியிடும் தனது உறவினருக்கு வாக்களிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமம் ஒன்றில் கடமையாற்றும்

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மாவடிச்சேனையில் பாரிய தீ





கொழும்பு,மார்ச்28

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு பிரதான வீதி மாவடிச்சேனையில் அமைந்துள்ள மின்சாரப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் பாரிய தீ விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த தீ விபத்து சம்பவம் வெள்ளிக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்தை கட்டுப்படுத்த ஓட்டமாவடி பிரதேச சபை மற்றும் மட்டக்களப்பு தீ அணைக்கும் படை, பிரதேச சமூக மட்ட அமைப்பினர், பிரதேச இளைஞர்கள் எனப்பலரும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நிலையில், குறித்த தீ விபத்தில் வர்த்தக நிலையத்தில் இருந்த பல இலட்சம் பெறுமதியான அனைத்துப் பொருட்களும் தீயில் கருகி உள்ளன.

குறித்த தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# மீனவர் பிரச்சினை மரபுரீதியாக தொடர்கிறது



கொழும்பு,மார்ச்28

1974 ஆம் மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நிகழ்வுகளால் இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை மரபுரீதியாக தொடர்கிறது என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய பாராளுமன்றில் நேற்று கேள்வி நேரத்தின் போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் நிலை குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டன. இதன்போதே இவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீன்பிடி தொடர்பாக இலங்கையில் இரண்டு சட்டங்கள் உள்ளன .ஒன்று 1996 ஆம் ஆண்டின் மீன்வள மற்றும் நீரியல் வளச் சட்டம். மற்றையது 1979 ஆம் ஆண்டின் வெளிநாட்டு மீன்பிடி படகுகளின் மீன்வள ஒழுங்குமுறை சட்டம். இந்த இரண்டு சட்டங்களும் 2018 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டன. இதனால் மிகவும் கடுமையான தண்டனைகள், பாரிய அபராதங்கள் மற்றும் விளக்கமறியல் என்பன வழங்கப்படுகின்றன.

தண்டனை அனுபவிக்கும் பலர் படகு உரிமையாளர்கள், ஓட்டுநர்களாக இருப்பதுடன் மீண்டும் மீண்டும் அவர்கள் கைதாகி குற்றவாளிகளாக காணப்படுவதால், தீர்வு முயற்சிகள் சிக்கலாகின்றன. இலங்கையில் இந்திய மீனவர்களை தடுத்து வைப்பது தொடர்பான தற்போதைய பிரச்சினைக்கான மூல காரணம் 1974 ஆம் ஆண்டு சர்வதேச கடல் எல்லைக் கோடு வரையப்பட்டபோது ஆரம்பமாகியது.

அதைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டில் இலங்கை மீன்பிடி அதிகார வரம்பை வரையறுத்ததன் மூலம் இப்பிரச்சினை நீண்டுள்ளது. அதேநேரம் தற்போது, இலங்கையில் மொத்தம் 97 பேர் விளக்கமறியலில் உள்ளனர். அவர்களில் 83 பேர் தண்டனை அனுபவித்து வருவதுடன், மூன்று பேர் விசாரணைக்காக காத்திருக்கின்றனர் என்றார். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# சரத் பொன்சேகாவுக்கு பிரித்தானியா தடை விதிக்காதது ஏன்?



கொழும்பு,மார்ச்28

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு பிரித்தானியா தடை விதிக்காமல் இருப்பது சந்தேகத்துக்குரியது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக்காலத்தில்பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித படுகொலைகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி முன்னாள் பாதுகாப்பு பிரதானிகளான சவேந்திர சில்வா, வசந்த கரன்னாகொட மற்றும் ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கு எதிராக பிரித்தானியா தடை விதித்துள்ளது. அதேபோல் இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய கருணா அம்மானுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யுத்தக் காலத்தில் இராணுவ தளபதியாக சரத் பொன்சேகா பதவி வகித்தார். அவரது கட்டளைகளையே சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய ஆகியோர் பதவி நிலை அதிகாரிகள் என்ற அடிப்படையில் செயற்படுத்தினார்கள். அவ்வாறாயின் ஏன் சரத் பொன்சேகாவுக்கு பிரித்தானியா தடை விதிக்கவில்லை.

சவேந்திர சில்வா, வசந்த கரன்னாகொட, ஜகத் ஜெயசூரிய ஆகியோர் யுதத்தை முடிவுக்கு கொண்டு வந்ததால் தான் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உட்பட அரசியல்வாதிகள் வடக்குக்கு தைரியமாக செல்கிறார்கள்.

பிரித்தானியாவின் தடை குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ராஜினாமா



கொழும்பு,மார்ச்28

இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பந்துர திலீப விதாரண தனது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, அவர் தனது ராஜினாமா கடிதத்தை போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், அவர் பதவி விலகியதற்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் போக்குவரத்துக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய கலாநிதி பந்துர திலீப விதாரண, நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராவார்.

இதற்கிடையில், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கீழ் உள்ள அமைச்சுக்களுக்கான நிறுவனங்களின் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்த மூன்றாவது நபராக கலாநிதி பந்துர திலீப விதாரண காணப்படுகிறார்.

அதேவேளை முன்னதாக, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன மற்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர் ருவான் விஜயமுனி ஆகியோர் தங்கள் பதவிகளில் இருந்து ராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தலதா மாளிகை யாத்திரை தொடர்பில் வெளியான அறிவிப்பு

கொழும்பு,மார்ச்28

தலதா மாளிகை யாத்திரைக்காக மோசடியான வகையில் நிதி திரட்டும் நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அஸ்கிரிய மகா விகாரையின் பிரதி பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

தலதா மாளிகை யாத்திரைக்கான நடவடிக்கை மற்றும் செயற்பாடுகள் அரசாங்கத்தினால் கண்டி மாநகர சபை மற்றும் தலதாமாளிகைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர, வேறு எந்த தரப்பினருக்கும் அது தொடர்பான பொறுப்பு கையளிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். தலதா மாளிகை யாத்திரை அடுத்த மாதம் 18 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தநிலையில், தலதா மாளிகை யாத்திரைக்கு நிதி திரட்டுவதற்குப் பங்களிக்குமாறு ஒரு குறிப்பிட்ட தரப்பினரால் சமூக ஊடகங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும், இந்த பிரசாரமானது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என தலதாமாளிகை தெரிவித்துள்ளது. தலதா மாளிகை யாத்திரைக்காகத் தனிப்பட்ட ரீதியில் எந்தவொரு நபரும் நிதியளிக்க வேண்டாம். அவ்வாறான செயற்பாடுகள் இங்கு இடம்பெற முடியாது.

ஆகவே, தனிப்பட்ட ரீதியில் நிதியளித்து ஏமாற வேண்டாம் என அஸ்கிரிய மகா விகாரையின் பிரதி பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# இலங்கையின் வான் பரப்பு முதன் முறையாக எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி மூடப்படவுள்ளது



கொழும்பு,மார்ச்28

எலன் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் **(Elon Musk's SpaceX)** நிறுவனத்தின் எவ்.ஆர். ஏ. எம். - 2 மிஷனுக்காகவே சில மணி நேரம் நாட்டின் வான் பரப்பு மூடப்படுகிறது.

வான் பரப்பு மூடப்படுவதால் மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கான விமான பயணங்களில் எந்தத் தடங்கலும் அல்லது மாற்றமும் ஏற்படாது என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கிழக்கு திசை நாடுகளான சிங்கப்பூர், பாங்கொக், பீஜிங், அவுஸ்திரேலிய ஆகியவற்றுக்கான விமான பயணங்களுக்கான நேரங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் **(TRCSL)** பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டபடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் ஸ்டார்லிங்க; **(Starlink)** இணைய சேவை வழங்கப்படும்என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ (யேடனைெய துயலயவளைளய) தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதும், ஸ்டார்லிங்க் இணைய சேவையைப் பெறுபவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மேற்பார்வை செய்வதும் அரசாங்கத்தின் பொறுப்பு.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலமும், பயனர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் செயன்முறையை சீராக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என நளிந்த ஜயதிஸ்ஸ **(Nalinda Jayatissa)** தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விவசாயிகளுக்கு உர மானியம்: வெளியானது மகிழ்ச்சி தகவல்

கொழும்பு,மார்ச்28

தென்னை விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கும் பணி மார்ச் 30 ஆம் திகதி முதல் தொடங்கும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட 27,500 மெட்ரிக் டன் ஆமூ உரத்தை எப்பாவல ராக் பாஸ்பேட் மற்றும் யூரியாவுடன் கலந்து, தேங்காய் பயிர் செய்கைக்காக 56,700 மெட்ரிக் டன் சிறப்பு யுஆீ தேங்காய் உரத்தைத் தயாரிக்க அரச உர நிறுவனம் தற்போது செயல்பட்டு வருவதாக அமைச்சு கூறியுள்ளது.

இந்த உரத்தை மானிய விலையில் வழங்கவும் விநியோகிக்கவும் தேவையான பணிகளை தென்னை பயிர்ச்செய்கை சபையும் அரச உர நிறுவனங்களும் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன கூறுகையில், " சந்தையில் ரூ.9000 விலைக்கு வாங்கப்படும் 50 கிலோகிராம் உர மூட்டையை ரூ.4000 நிவாரண விலையில் வழங்க இம்மாதம் 30 திகதியில் இருந்து வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் ஹந்தபனகல தென்னை தோட்ட நாற்றங்கால் வளாகத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது."

என்றார். அதன்படி, இந்த மானியத்தைப் பெற, தென்னை விவசாயிகள் தென்னை பயிர்ச்செய்கை சபையால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை தென்னை பயிர்ச்செய்கை சபையின் உத்தியோகபூர்வ வலைத்தளமான ாவவிள:ஃஃ உழஉழரெவளசடையமெ.டம இல் இருந்து பெறலாம் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)






# திட்டமிட்டு அவையில் இருந்து வெளியேற்றினார்: சபாநாயகர் மீது இ.பி.எஸ்., குற்றச்சாட்டு

எங்களை திட்டமிட்டு அவையில் இருந்து சபாநாயகர் வெளியேற்றியுள்ளார் என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., குற்றம் சாட்டி உள்ளார்.

சட்டசபையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க., எம்.எல்.ஏ.,க்கள் சபாநாயகர் அப்பாவு உத்தரவுப்படி வெளியேற்றப்பட்டனர். பின்னர் சட்டசபை வளாகத்தில் நிருபர்கள் சந்திப்பில் இ.பி.எஸ்., கூறியதாவது: உசிலம்பட்டி போலீஸ் கொலை தொடர்பாக பேச அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.

அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க., எம்.எல்.ஏ.,க்கள் வெளியேற்ற சபாநாயகர் உத்தரவு மக்கள் பிரச்னை குறித்து அவையில் பேச அனுமதி வழங்கப்படவில்லை. போலீசாரையே கொலை செய்யும் அளவிற்கு போதைப்பொருள் வியாபாரிகள் தைரியம் பெற்றுள்ளனர். போதைப்பொருளை கட்டுப்படுத்த தி.மு.க., அரசு தவறிவிட்டது. மக்கள் பிரச்னையை பேசவே எதிர்க்கட்சி, எங்களை வெளியேற்றுவதிலேயே சபாநாயகர் குறியாக இருக்கிறார்.

மக்கள் பிரச்னையை கவனத்துக்கு கொண்டு வருவது தான் எங்கள் நிலைப்பாடு. சர்வாதிகார போக்கை சட்டசபையில் அரங்கேற்றி உள்ளார். ஆபரேஷன் கஞ்சா திட்டம் என்ன ஆனது? போதைப்பொருள் விற்பனையைத் தடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

போதைப்பொருள் விற்பனை குறித்து தகவல் கொடுப்பவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இவ்வாறு இ.பி.எஸ்., கூறினார். (ஐ)




## இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்!

இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது என முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

இந்திய தொழில்கூட்டமைப்பின் (சி.ஐ.ஐ.,) தென்னிந்திய மாநாட்டை முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: சென்னையை உலகத்தரம் வாய்ந்த நகரமாக மாற்ற 3ஆவது திட்டம் தயாராகி வருகிறது. பசுமைப் பொருளாதார துறையில் முதலீடு செய்ய வேண்டும்.

தொழில்துறைக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி இலக்கு. அனைவரையும் உள்ளடக்கி வளர்ச்சிக்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதார வளர்ச்சியில் தமிழக இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் தமிழகத்தில் உள்ளன. கோவை, திருச்சி, ஒசூர் போன்ற மாவட்டங்கள் பெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளன் கடந்த 11 மாதங்களில் 12.6 பில்லியன் டாலர் அளவிற்கு மின்சாதனங்களை ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு 12.11 சதவீதம் பங்களிப்பு செய்து வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளில், தமிழகம் 8 சதவீதத்துக்கும் மேல் பொருளாதார வளர்ச்சி அடைந்து, இந்தியாவின் 2-வது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வருகிறது. தமிழகத்தை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடாமல், வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். நீர்வளங்களை திறம்பட நிர்வகித்தல், நீர் சேகரிப்பு உள்ளிட்டவற்றை செயல்படுத்தி வருகிறோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார். (ஐ)



## பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு தொடங்கியது

தமிழகம், புதுச்சேரியில் இன்று (மார்ச் 28) பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு தொடங்கியது. பள்ளியில் தேர்வு எழுத சென்ற மாணவிகள் ஆசிரியரிடம் ஆசி பெற்றனர்.

தமிழகத்தில், 10ம் வகுப்பு பொதுத்தேர்வு இன்று தொடங்கி வரும் ஏப்., 15 வரை நடக்கிறது. மாவட்டம் முழுதும், 108 மையங்களில் தேர்வு துவங்குகிறது. தமிழ் தேர்வு இன்று நடக்கிறது. ஏப்., 2ல் ஆங்கிலம், 4ல், விருப்ப மொழிப்பாடம், 7ல் கணிதம், 11ல் அறிவியல், 15ல் சமூக அறிவியல் தேர்வு நடக்கிறது.

12,487 பள்ளிகளைச் சேர்ந்த 4 லட்சத்து 46 ஆயிரத்து 471 மாணவர்கள், 4 லட்சத்து 40 ஆயிரத்து 499 மாணவிகளும், 25 ஆயிரத்து 841 தனித்தேர்வர்கள் மற்றும் 273 சிறைவாசித் தேர்வர்கள் எழுத உள்ளனர். தேர்வு எழுத வந்த மாணவியருக்கு, தேர்வு அறையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி ஆசிரியர்கள் அறிவுரை வழங்கினர். (ஐ)

## அன்றே சொன்னேன் இன்று இ.பி.எஸ்., பாதை மாறிட்டார்: துணை முதல்வர் உதயநிதி



*'இன்று டில்லியில் வழி மாறி, 3 கார்களில் மாறி பா.ஜ., அலுவலகத்திற்கு சென்ற அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்.,க்கு என்னுடைய வாழ்த்துக்கள்,' என்று சட்டசபையில் துணை முதல்வர் உதயநிதி தெரிவித்துள்ளார்.*

*மானியக் கோரிக்கைகள் மீதான பதிலுரையில் துணை முதல்வர் உதயநிதி பேசியதாவது: சட்டசபையில் நான் பதிலுரை ஆற்றும் போது எதிர்க்கட்சி தலைவர் இ.பி.எஸ்., ஒருமுறை கூட அவையில் இருப்பதில்லை. கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு இ.பி.எஸ்., என்னுடைய காரில் ஏறி அவர் செல்ல முயன்றார். அப்போது, என்னுடைய காரை எடுத்துச் செல்லுங்கள் என்றும் பிரச்னை இல்லை என்றேன். அப்போது, முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ்., எங்கள் கார் எப்போதும் வழி மாறி போகாது என்றார். ஆனால், இன்று டில்லியில் வழி மாறி, 3 கார்களில் மாறி அவங்க கட்சி அலுவலகத்திற்கு சென்றதாக கூறினார்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.*

*பொதுவாக ஒரு பேப்பரில் எழுதும் சில 'உ' போட்டு எழுதத்தொடங்குவார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் 'ரூ' போட்டு இந்தப் பட்ஜெட்டை தொடங்கியுள்ளார். இப்படிப்பட்ட தலைவர் இருக்கும் வரை தமிழகத்தில் ஹிந்தி திணிப்பு மட்டுமல்ல எந்தத் திணிப்பையும் செய்ய முடியாது, இவ்வாறு கூறினார்.*

*தொடர்ந்து அவர் பேசியதாவது: 5 மண்டலங்களில் மகளிர் சுயஉதவிக் குழு சார்பில் உணவுத்திருவிழா நடத்தப்படும்.*

*தந்தை மகனுக்காற்றும் உதவீ உதயநிதிக்கு பதிலாக மானியக்கோரிக்கையை முன் வைத்தார் முதல்வர்!*

*120 வட்டாரங்களில் ரூ.1,000 கோடியில் வாழ்ந்து காட்டுவோம் 3.0 திட்டம் செயல்படுத்தப்படும்*

*ரூ.66 கோடியில் கிராமப்புற இளைஞர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.*

*நிலம் உள்ள அனைத்து தொகுதிகளிலும் மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் 22 சட்டப்பேரவை தொகுதிகளில் மினி ஸ்டேடியம் கட்டும்பணி விரைவில் தொடங்கும்*

*6 மாவட்டங்களில் பாரா விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகள் இன்னும் 3 மாதங்களில் நிறைவு பெறும் விளையாட்டு வீரர்கள் திறமைக்கேற்ப உதவித் தொகை வழங்கப்படும்*

*சென்னை, மதுரையில் 24 நாடுகள் பங்கேற்கும் ஜூனியர் ஆடவர் ஹாக்கி போட்டி நடைபெறும். மகளிர் உரிமைத் தொகை கோரி விரைவில் புதியவர்கள் விண்ணப்பிக்கலாம். கடந்த 19 மாதங்களில் ரூ.21,000 கோடி உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது, இவ்வாறு அவர் கூறினார். (ஐ)*

# நிழலும் நிஜமும்!



நமது தமிழ்த் திரைப்படங்களும் நம் காதல் மற்றும் கூடல் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள நமக்காற்றிவரும் தொண்டைப் பற்றி இங்கே கட்டாயம் பேசியாக வேண்டும்.

பொய்யான உச்சக்கட்டப் பிரச்சினையைப் பற்றி எந்த தமிழ் சினிமாவும் தீவிரமாகப் பேசியதாக ஞாபகமில்லை. கதாநாயகனையோ அல்லது வில்லனையோ மயக்கி(?) அவர்களிடமிருந்து ஆதாயம் தேடும் காட்சிகளில் வேண்டுமானால் கவர்ச்சி நடனமாடும் நடிகைகள் அவ்வாறு ‘ஆ-ஊ’ என்று உதடுகளைச் செயற்கையாகக் கடித்துக்கொண்டு வேண்டுமென்றே நடிப்பதைப் போல் காட்டியிருக்கிறார்கள்.

அல்லது கதாநாயகிகள் நடிக்கும் முதலிரவுப் பாடல்களில் அவ்வாறு படம்பிடித்திருப்பார்கள். அதுகூட ஓர் ஆணை அவள் தூண்டும் விதத்திலும், அவனுக்குக் கிளர்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஊட்டும் விதத்திலும் அவள் அப்படி பொய்யாக வேண்டுமென்றே நடிப்பதைப் போல் காட்டப்பட்டிருக்குமேயொழிய, ஒரு பெண்ணின் உண்மையான ஏமாற்ற உணர்வுகளை எந்த விதத்திலும் வெளிப்படுத்துவதாகப் பதிவுசெய்யப்பட்டதில்லை.

ஒருவேளை அப்படிக் காட்டிவிட்டால் அதில் நடித்துள்ள நடிகரின் ‘ஆண்மை’ பற்றிய மதிப்பிற்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற ஆணாதிக்க மனப்பான்மையில்கூட இயக்குநர்களும் நடிகர்களும் தவிர்த்திருந்திருக்கலாம். எந்த விதமான உண்மைத்தன்மையும் அந்தக் கவர்ச்சிப் பாடல் காட்சிகளில் கூட இருந்ததில்லை. பொய்யான உச்சக்கட்டப் பிரச்சினை மட்டும்தான் என்றில்லை, காதல், காமம், கணவன் மனைவி உறவு எல்லாமே ஒருவிதப் பொய் பூசுதல்களுடன்தான் நமது தமிழ்த் திரைப்படங்களில் காட்டப்பட்டு வந்துள்ளன. அதிலும் ஒரு அன்பானவனோ, பெண்ணின் மன உணர்வுகளை மதிப்பவனோ, அவளைக் காதலுடன் தாங்குபவனோ எல்லாம் ஒரு நல்ல கதாநாயகனாகக் காட்டப்படமாட்டான்.

அப்படி ஒரு கதாபாத்திரம் இருந்தாலும் அவனைக் கதாநாயகி தன் பின்னால் சுற்றத்தான் வைப்பாள். அவ்வளவு சீக்கிரம் அவனது நல்ல குணநலன்களை மதித்தோ அல்லது பாராட்டியோ பேசி அவன் பின்னால் போய்விடமாட்டாள். அப்படி தனது காதலியையோ அல்லது மனைவியையோ மிகவும் மதிக்கும் ஓர் ஆணை நம் தமிழ் சினிமாவும், சமுதாயமும் கரித்துத்தான் கொட்டியிருக்கின்றன. ”ஆம்பிளை என்ற கெத்து இல்லாம, பொம்புளை பின்னுக்கு எப்படி சுத்துறான் பார், பொண்டாட்டிதாசன்” என்றெல்லாம் அவனுக்கு பலவிதமான பட்டப்பெயர்களைக் கொடுத்து அவமானமும் அசிங்கமும்தான் படுத்துகின்றன.

எந்தப் படத்திலும் அவ்வாறு தன்னை ஏளனமாகப் பேசுபவர்களைப் பார்த்து, “என் மனைவி, நான் அவ பின்னுக்கு சுத்துறேன- உங்களுக்கென்ன வந்துச்சு?” என்று எந்தக் கதாநாயகனும் கேட்பதில்லை. உண்மையிலும் அவ்வாறு எந்த ஆணும் கேள்வி கேட்பதில்லை. ஆனால், கடைந்தெடுத்த ஒரு அயோக்கியன், வேலை வெட்டி இல்லாமல் ஊர் சுற்றுபவன், பெற்றவர்களைக்கூட மதிக்காதவன், குறைந்தபட்சம் நான்கைந்து



பெண்களையாவது வன்புணர்ந்தவன்தான் மிகச் சிறந்த கதாநாயகனாகக் காட்டப்பட்டிருப்பான். இத்தகைய சகல கல்யாண குணங்களையுமுடைய ஒரு ஆணின் பின்னால்தான் கதாநாயகி, ‘லோலோ’ எனச் சுற்றுவாள்.

இதுபோன்ற திரைப்படங்களைப் பார்த்து வளரும்போது, ‘ஒரு பெண்ணை உடல்ரீதியாகத் திருப்தியடைய வைக்கக்கூடிய ஆண் இப்படித்தானிருப்பான்’ என்று சிறு வயதிலேயே பெண்கள் மனதில் பதிந்து விடுகிறது. “அதெல்லாம் அந்தக் காலத்துப் பெண்கள் அப்படி இருந்திருக்கலாம், இப்பல்லாம் அப்படியில்ல” என்று சொல்லாதீர்கள்.

சமீபத்தில் ஒளிபரப்பான சில நிகழ்ச்சிகளில்கூட, “இந்த குணங்களுடன் இருக்கும் ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு நான் திருத்துவேன” என்று முட்டாள்தனமாகப் பெண்கள் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முரட்டுத்தனமான ஆண்களிடம்தான் தங்களுக்கு ‘கிக்’ இருக்கிறது என்று ஒரு கூட்டம் இன்னமும் உளறிக் கொட்டிக்கொண்டுதான் இருக்கிறது. நீங்கள் திருமணம் செய்துகொண்டு அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு ஆசைப்படுகிறீர்களா, அல்லது இப்படிப்பட்ட ஆணைத் திருமணம்செய்துகொண்டு அவனைத் திருத்துவதுதான் வேலை என்று திரியப் போகிறீர்களா?

“பெண்கள் திருமணம் செய்து கொள்வது குடும்பம் நடத்தத்தானேயொழிய மனநலக் காப்பகம் நடத்துவதற்காகயில்லை” என்று மற்றவர்களிடம் சொல்வதற்கு முன் நாம் அதை முதலில் தெளிவாகப் புரிந்து கொள்வதே நலம். இந்தப் ‘புதிய பாதை’ கதையெல்லாம் சினிமாவிலும், நாடகத்திலும் பார்ப்பதற்கும், புத்தகங்களில் கதைகளாகப் படிப்பதற்கும் வேண்டுமானால் நன்றாக இருக்குமேயொழிய உண்மை வாழ்க்கைக்கு ஒத்து வராது என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். அப்படிப்பட்ட ஆண்களைத் திருமணம் செய்து கொண்ட பலர் அவனைத் திருத்துவதற்கு முன்னால் தங்கள் வாழ்க்கையையே தொலைத்து விடுகிறார்கள்.

ஆண், பெண் யாராகயிருந்தாலும் பதினைந்து வயதுக்குள்ளாகவே அவர்களது குணநலன்களில் 85ூகும் மேல் வடிவமைக்கப்பட்டு விடுகிறது. வாழ்க்கை அவர்களுக்குக் கற்பிக்கும் பாடங்களிலிருந்து சில சிறிய சிறிய விஷயங்களில்தன்னை மேம்படுத்திக்கொள்ளலாமேயொழிய அப்படியே தன்னைத் தலைகீழாக யாராலும் மாற்றிக்கொள்ள முடியாது. திருமணம் என்ற நிகழ்வு நடந்தவுடனேயே உங்களுக்காக ஒரு நபர் தன்னை 100ூ மாற்றிக் கொண்டு விடுவார் என்ற மாயையான எண்ணத்திலிருந்து முதலில் வெளியே வாருங்கள்.


அடுத்தது, அத்தகைய முரட்டுத்தனமான ஆணால்தான் உடலுறவில் சிறப்பாகச் செயற்பட முடியும் என்ற கருத்தும் மிகவும் தவறான ஒன்றுதான். ஆண், பெண் இருவருக்கும் எந்த அளவு பரஸ்பர புரிதல், காதல், அன்பு, ஒருவரையொருவர் உடலளவிலும் மனதளவிலும் திருப்தி படுத்த வேண்டியது தங்களது கடமை என்ற பொறுப்புணர்வு போன்றவை இருக்கிறதோ அவற்றைச் சார்ந்துதான் அவர்களது உடலுறவில் மகிழ்ச்சியும் திருப்தியுமிருக்கும். எனவே, நமது தமிழ் சினிமா நமக்குக் காலம் காலமாகக் கற்றுக்கொடுத்துள்ள இத்தகைய தவறான படங்களைப் புறக்கணியுங்கள். ஒருவேளை பொழுதுபோக்குக்காக அவற்றைப் பார்த்தாலும் உங்கள் மனதிலிருந்து அவை விதைக்கும் எதார்த்தமற்ற, பொய்யான பிம்பங்களை முற்றிலுமாக அகற்றி, இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள அறிவியல் மற்றும் உளவியல் பூர்வமான விஷயங்களை உள்வாங்கி செயல்படுத்துங்கள்.

பாலியல் கல்வியைப் புகட்டும் திரைப்படங்களைப் பற்றிப் பார்ப்பதற்கு முன், அந்த சொல்லைப் பற்றி நம் மக்களுக்கிருக்கும் மனநிலையைப் பற்றியும் பேசியாக வேண்டும். ‘பாலியல் கல்வி’ என்று யாராவது சொன்னாலே பெற்றோருக்கு அந்த வார்த்தையைப் பற்றிய மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டுவிடுகிறது. சொல் ஒன்றுதான். ஆனால், ‘அது யாருக்கு’ என்பதைப் பொறுத்து அதன் உள்ளடக்கத்தில் பெரும் வேறுபாடுகளிருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எப்படி உடலுறவு கொள்வது, என்பதைக் கற்றுத் தருவது மட்டும்தான் ‘பாலியல் கல்வி’ என்ற சொல்லுக்கிருக்கும் ஒரே பொருள் என்று நம் மக்கள் மிகத் தவறாகப் புரிந்து வைத்துள்ளார்கள். அதனால்தான் அந்த சொல்லைக் கேட்டாலே, ‘ஐயோ, வேண்டாம் எங்கள் குழந்தைகள் சிறு வயதிலேயே கெட்டுப் போய்விடுவார்கள். நமது கலாசாரம் என்ன, பண்பாடு என்ன என்றெல்லாம் பொங்கியெழுந்துவிடுகிறார்கள். குழந்தைகளுக்குப் பாலியல் கல்வி வேண்டும் என்று ஒரு சாராரும் வேண்டவே வேண்டாம், நேரம் வரும்பொழுது அவர்களாகவே தெரிந்து கொள்ளட்டும் என இன்னொரு சாராரும் வாதாடி வருகின்றனர். .

அதன் பிறகு கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு குழந்தை பாலியல் வன்புணர்வுக்குள்ளாகும் போதெல்லாம் ஊடகங்களிலிருந்து கருத்து கேட்கவருவார்கள். ஆனால், அது ஒரு சம்பிரதாயமாகத்தான் (8ஆம் பக்கம் பார்க்க...)



# வெள்ளை மாளிகையில் இப்தார் விருந்து முஸ்லிம்களுக்கு நன்றி கூறிய டிரம்ப்



அமெரிக்க தேர்தலில் தனக்கு ஓட்டு போட்ட முஸ்லிம்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக வெள்ளை மாளிகையில் நடந்த இப்தார் விருந்து நிகழ்ச்சியில் அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ரமலான் பண்டிகையையொட்டி அதிபர் டிரம்ப் தலைமையிலான அரசு நிர்வாகத்தின் சார்பில் வெள்ளை மாளிகையில் இப்தார் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமான முஸ்லிம்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

விரைவில் புடின் மரணமடைவார்: கணித்து சொல்கிறார் உக்ரைன் அதிபர்

அப்போது, கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஆதரவு கொடுத்த ஆயிரக்கணக்கான அமெரிக்க முஸ்லிம் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அமெரிக்க அதிபர் கூறினார். மேலும், முஸ்லிம் சமூகத்தினருக்கு கொடுத்த வாக்குறுதிகளை அரசு தொடர்ந்து செய்து கொடுக்கும் என்று தெரிவித்தார்.

மேலும் அவர் பேசியதாவது மத்திய கிழக்கு பகுதியில் அமைதியை நிலைநாட்ட எனது தலைமையிலான அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. அப்போது, இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள சில முஸ்லிம் நாடுகளுக்கு இடையே, வரலாற்று சிறப்பு மிக்க ஆபிரகாம் உடன்படிக்கை சாத்தியமில்லாதது என்று அனைவரும் கூறினர். ஆனால், நாம் அதனை சாத்தியப்படுத்தினோம்.

முஸ்லிம் நண்பர்களுடன் இணைந்து பணியாற்றி, ஒளிமயமான, நம்பிக்கையான எதிர்காலத்தை உருவாக்க முடியும். உலகம் முழுவதும் அமைதியையே அனைவரும் விரும்புகிறோம், இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# மியான்மரில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவு!

மியான்மரில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், கட்டடங்கள் குலுங்கியதால், பொதுமக்கள் அலறியடித்துக் கொண்டு வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

மியான்மரின் வடகிழக்கு நகரமான சகாய்ங்கில் இருந்து 16 கி.மீ., தொலைவில் 10. கி.மீ., ஆழத்தில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

முதலில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.7 ஆக பதிவானது. தொடர்ந்து, மற்றொரு நிலநடுக்கமும் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.4 பதிவாகியது.

ஒரே சமயத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் அண்டை நாடுகளிலும் உணர்ந்தது. வங்கதேசம், இந்தியா, லாவோஸ், தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளிலும் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, கட்டடங்கள் குலுங்கியதால், பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் தஞ்சம் புகுந்தனர். இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

இதனிடையே, அடுக்குமாடி கட்டடம் ஒன்று இடிந்து விழுந்து தரைமட்டமான வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த கட்டடத்தின் கீழே இருந்த மக்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஓடும் காட்சிகள் அதில் இடம்பெற்றுள்ளன. உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் குறித்து விரிவான தகவல்கள் ஏதுமில்லை. (ஐ)

# அமெரிக்கா உடன் பழைய உறவு முடிந்துவிட்டது: வரி விதிப்புக்கு கனடா பதிலடி!



அமெரிக்காவுடனான பழைய உறவு முடிந்துவிட்டது என அமெரிக்கா அதிபர் டிரம்பின் வரிகளுக்கு பதிலளிக்கும் விதமாக கனடா பிரதமர் மார்க் கார்னி கூறுகிறார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் வாகன இறக்குமதிக்கு 25 சதவீத வரியை அறிவித்தது. இது அடுத்த வாரம் நடைமுறைக்கு வர உள்ளது. கனடா பொருட்களுக்கு 25 சதவீத வரியையும், சீனா பொருட்களுக்கு 10 சதவீத வரியையும் டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா அதிபர் டிரம்பின் வரிகளுக்கு பதிலளிக்கும் விதமாக கனடா பிரதமர் மார்க் கார்னி கூறியதாவது: அமெரிக்காவின் வரிகள் நியாயமற்றவை. ஏற்கனவே உள்ள வர்த்தக ஒப்பந்தங்களை மீறுவதாகும். அமெரிக்காவுடனான பழைய உறவு முடிந்துவிட்டது.

அமெரிக்கா இனி நம்பகமான கூட்டாளி இல்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் சில நம்பிக்கையை மீட்டெடுக்க முடியும். கனடாவிற்கும் அமெரிககாவிற்கும் இடையிலான ஆழமான பொருளாதார, பாதுகாப்பு மற்றும் இராணுவ உறவுகளின் சகாப்தம் முடிந்து விட்டது. அமெரிக்க பொருட்களுக்கு ஏப்ரல் 2ம் தேதி மேலும் வரி விதிக்கப்படும்.

கனடாவை பலவீனப்படுத்த, நம்மை சோர்வடையச் செய்ய, அமெரிக்கா நம்மை சொந்தமாக்கிக் கொள்ளும் வகையில் பல முயற்சிகள் செய்கிறது. இதை நான் நிராகரிக்கிறேன். அது ஒரு போதும் நடக்காது. சமீபத்திய வரிகளுக்கு எதிராக எங்களது பொருளாதாரத்தை வலுப்படுத்துவோம். வரி விதிப்பை எதிர்த்து போராடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ)

# இந்தோனேஷியாவில் கலவரம் பார்லியில் நுழைந்த மாணவர்கள்

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியாவில் அதிபராக பிரபாவோ இருக்கிறார். கடந்த அக்டோபரில் பதவியேற்ற இவர், முன்னாள் ராணுவ தளபதி.

தற்போது, துணை சபாநாயகர், சட்ட அமைச்சர், ராணுவ அமைச்சர் என முக்கிய பதவிகளில் பெரும்பாலானோர் இவரது ஆதரவாளர்களாக உள்ள நிலையில், ராணுவத்துக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கும் ராணுவச் சட்டம் சமீபத்தில் பார்லிமென்டில் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின்படி, ராணுவ அதிகாரிகளாக இருப்பவர்கள், குறைந்தபட்சம் ஐந்து அரசு துறைகளில் கூடுதல் பதவியை வகிக்கலாம்.

இதன் வாயிலாக, சிவில் அமைப்புகளிலும் ராணுவ ஆதிக்கம் விரிவடைவதால், மாணவர்கள், இந்தோனேஷியா உரிமை மீட்புக் குழுக்கள் என பலரும் போராட்டத்தில் குதித்தனர். இந்தோனேஷியா முழுதும் வன்முறை வெடித்தது.

தலைநகர் ஜகார்த்தாவில், பார்லிமென்ட் கட்டடத்துக்குள் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் நேற்று நுழைய முயன்றனர்.

அருகில் உள்ள தெருக்களில் குவிந்த இவர்கள், பாட்டில் குண்டுகளை வீசினர். இதையடுத்து, கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தண்ணீரை பீய்ச்சியடித்தும் அவர்களை போலீசார் கலைத்தனர். எனினும், ஜகார்த்தா துவங்கி, ஏச்வரையிலும் கலவரம் வெடித்தது. தெற்கு கலிமந்தன், சுரபாயா, கிழக்கு ஜாவா உள்ளிட்ட இடங்களில் அரசு அலுவலகங்கள் முன் மாணவர்கள் குவிந்து, கற்கள் மற்றும் பாட்டில் குண்டுகளை வீசியும் வாகனங்களை போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். வன்முறை தொடர்வதால், ராணுவமும் களமிறங்கி உள்ளது.

முகாம்களிலேயே ராணுவம் இருக்க வேண்டும் மக்களின் சிவில் வாழ்க்கையில் ராணுவம் தலையிடக் கூடாது என மாணவ அமைப்பினர் வலியுறுத்துகின்றனர். மேலும், கடந்த 1998 வரை, 32 ஆண்டு காலம் அசைக்க முடியாத அதிபராக சுகார்தோ இருந்தது போலவே, பிரபாவோவும் பதவியில் நீடிக்கும் திட்டத்துடன் மிக வேகமாக ராணுவச் சட்டத்தை பார்லிமென்டில் நிறைவேற்றியதாகவும் குற றஞ்சாட்டுகின்றனர். (ஐ)



## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெண் கிராம அலுவலர் ஒருவர், அவர் கடமையாற்றும் கிராமத்தில் இருந்து வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில் போட்டியிடும் தனது உறவினருக்கு வாக்களிக்குமாறு கிராம அலுவலரது அலுவலகத்திற்கு வருபவர்களுக்கு அறிவுறுத்துகின்றார் என்று பொதுமககள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## மோடியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியோருடன் இரு தரப்பு பேச்சுகளில் ஈடுபடவுள்ளார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அனுராதபுரத்தில் உள்ள ஸ்ரீ மகா போதிக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவார் என்றும், இந்திய அரசின் உதவியுடன் நாட்டில் செயற்படுத்தப்படும் பல திட்டங்களைத் தொடங்கி வைப்பார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமரின் இந்த விஜயத்தின்போது இந்திய வெளிவிவகார அமைச்சருடன் அந்நாட்டு தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இந்திய வெளிவிவகார செயலாளர் மற்றும் இந்திய அரசின் பல சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சந்தேக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்கு இன்று அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இன்றைய நீதிமன்ற விசாரணையில் பிரதான சந்தேகநபர் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டார். பாதிக்கப்பட்ட பெண் வைத்தியரும் இன்று நீதிமன்றத்துக்கு வந்து பிரதான சந்தேகநபரை அடையாளம் காட்டினார்.

பிரதான சந்தேகநபரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## நிராகரிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டன.

இந்த வழக்குகளில் மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் முன்னிலையாகியிருந்தார்.

மேற்படி வழக்குகளின் விசாரணையின்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி, இது சம்பந்தமாக சுமுகமான முடிவுக்கு வர விரும்புவதாக மன்றுரைத்தார்.

சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் ஆயம் குறித்த வழக்குகள் மீதான விசாரணையை எதிர்வரும் முதலாம் திகதி வரையில் ஒத்திவைத்துள்ளது.

எனினும், அன்றைய தினத்துக்கு முன்னர், சட்டமா அதிபர் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் மனுதாரர்களின் சட்டத்தரணிகள் ஆகிய தரப்பினர்களுக்கு இடையே கலந்துரையாடல் நடத்தப்பட்டு அதன்போது எட்டப்படும் தீர்மானம் தொடர்பில் மன்றுக்கு அறியப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, சட்டமா அதிபர் திணைக்களத்தில் நாளைமறுதினம் முற்பகல் 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்று மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்கு பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு தொடர்பில் சட்டமா அதிபரால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பிரித்தானியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இது பற்றியும் நாம் ஆராய்ந்து வருகின்றோம். இப்படியான யோசனைகள் எப்படி வருகின்றன என்பது எமக்குத் தெளிவாகின்றது. அது பற்றிய புரிதல் எமக்கு உள்ளது. உலக அரசியல் எவ்வாறு செயற்படுகின்றது என்பதும் எமக்குத் தெரியும்.

இலங்கை என்பது சுயாதீன நாடாகும். எனவே, பிரிட்டனால் எடுக்கப்பட்ட ஒரு தலைப்பட்சமான தீர்மானம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு உரிய வகையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயத்திலும் அரசியல் நடத்துவதற்கு எதிரணிகள் முற்படுகின்றன. அந்தப் பொறிக்குள் நாம் சிக்கமாட்டோம். நாடு தொடர்பில் சிந்தித்தே செயற்படுகின்றோம்.

சர்வதேசத்துடனான கொடுக்கல், வாங்கலின்போது எமது இராஜதந்திர நிலைப்பாடுகளுக்கமைய செயற்படுவோம்.” - என்றார்.

## போலிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்போது இலங்கையில் ஊவ, வெல்லஸ்ஸ புரட்சியை ஒடுக்குவதற்காக மக்கள் கொலை செய்யப்பட்டனர். தமது செயல் தொடர்பில் பிரிட்டன் வெட்கப்பட வேண்டும்.

இந்தத் தடை தொடர்பில் அரசு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அத்துடன் நின்றுவிடாமல் முன்னோக்கிச் செல்ல வேண்டும். ஏனெனில் போலிக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எமது நாட்டுக்கு எதிராகக் கூட தடை விதிக்கப்படக்கூடும்.” - என்றார்

# நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களையும் பதிவு செய்க!

## - ஆணைக்குழுத் தலைவர் வேண்டுகோள் -

பல்கலைக்கழக மாணவர்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் வகையில் சகல பல்கலைக்கழகங்களிலும் மாணவர் ஒன்றியங்கள் மற்றும் பீட மாணவர் ஒன்றியங்களுக்கான தேர்தல்களை நடாத்தி, மாணவர் ஒன்றியங்களைப் பதிவு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமரும், கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் அந்தந்தக் காலப்பகுதியினுள் செயற்படும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் பீட மாணவர் ஒன்றியங்களுக்கான தேர்தல்களை நடாத்தாமல், மாணவர் ஒன்றியங்களைப் பதிவு செய்ய அனுமதிக்காமல் மாணவர்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதாகக் கிடைத்த பல்வேறு முறைப்பாடுகளை அடுத்தே, பிரதமரும், கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய இந்த அறிவுறுத்தலை வழங்கியிருக்கிறார்.

இதன் அடிப்படையில், சகல பல்கலைக்கழகங்களிலும் இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் பல்கலைக்கழகங்களின் உபவிதிகளுக்கமைவாக, மாணவர் ஒன்றியங்கள் மற்றும் பீட மாணவர் ஒன்றியங்களுக்கான நிர்வாகத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்களை நடாத்தி, மாணவர் ஒன்றியங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவரத்ன பல்கலைக்கழகத் துணைவேந்தர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பிக்கு- பிரதான சந்தேக நபர் கைது!

கொழும்பு,மார்ச்28

எப்பாவல பொலிஸ் பிரிவின் கிரலோகம பகுதியில் உள்ள மடாலயம் ஒன்றினுள் வசித்து வந்த 69 வயதுடைய பிக்கு ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் மார்ச் 25ஆம் திகதி இடம்பெற்றது. சம்பவம் குறித்த விசாரணைகளை எப்பாவல பொலிஸார் முன்னெடுத்து வந்திருந்தனர்.

இந்த நிலையில் கொலை சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர், கட்டுநாயக்க பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அனுராதபுரம், எப்பாவல, கிரலோகம பிரதேசத்தில் உள்ள மடத்தில் வசித்து வந்த பிக்கு ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

கிரலோகமவில் உள்ள ருக்சேவன மடத்தின் பீடாதிபதியாகப் பணியாற்றிய 69 வயதான விலச்சியே பிரேமரத்ன தேரர் என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

கொலையின் போது அவரது உடலின் பல பகுதிகளில் கடுமையான வெட்டுக்காயங்கள் காணப்பட்டன.

இதனையடுத்து எப்பாவல பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த போது, பிக்குவிற்கு முச்சக்கர வண்டி மற்றும் சாரதி ஒருவர் இருப்பது தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் எப்பாவல வைத்தியசாலைக்கு அருகிலுள்ள தனியார் காணியொன்றில், கைவிடப்பட்ட நிலையில் பிக்குவுக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

எனினும் அதன் சாரதியைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், அனுராதபுரம் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர் திலின ஹேவாபதிரனவின் அறிவுறுத்தலின் பேரில், எப்பாவல பொலிஸாரால் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்படி காணாமல் போனவரின் தொலைபேசி தரவுகளை பகுப்பாய்வு செய்ததில் இருந்து பெறப்பட்ட தகவல்கள், அவர் கட்டுநாயக்க பகுதியில் தங்கியிருப்பது தெரியவந்தது. பின்னர், அவரை கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது கொலை செய்ததை ஒப்புக்கொண்டார்.

பொலிஸ் விசாரணையின் போது, கொலை செய்யப்பட்ட பிக்குவுடன் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினை காரணமாகத்தான் கொலையைச் செய்துவிட்டு, தப்பிச் சென்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மது போதையில் வாகனத்தை செலுத்திய சாரதி சாரதி உரிமம் வாழ்நாள் முழுவதும் ரத்து– நீதிமன்றின் அதிரடி தீர்ப்பு!

கொழும்பு,மார்ச்28

தனியார் பேருந்து சாரதி ஒருவர் மது போதையில் வாகனத்தை செலுத்தியமைக்காக, சாரதியின் சாரதி உரிமத்தை வாழ்நாள் முழுவதும் ரத்து செய்ய பாணந்துறை தலைமை நீதவான் சம்பிகா ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

அத்துடன் மேலதிகமாக ரூ. 40,000 அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

வேதநாகம் எட்வின் நிமல் என்ற தனியார் பேருந்து சாரதிக்கே குறித்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவன ஊழியர்கள் குழுவை ஏற்றிக்கொண்டு பாணந்துறையிலிருந்து களுத்துறை நோக்கிப் பயணித்த பேருந்து, பாணந்துறை நல்லுருவப் பகுதியில் நிறுத்தப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சாரதி மது அருந்தியிருந்தமையை பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்படி, பயணிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவித்ததற்காக அவரை கடுமையாக எச்சரித்த பின்னர் தலைமை நீதிபதி நேற்று குறித்த தண்டனையை விதித்தார்.

# நிழலும் நிஜமும்!.......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்ததேயொழிய சமுதாயத்தில் மாற்றமேற்படுத்தக்கூடிய அதிகாரம் வாய்ந்தவர்கள், இது போன்ற பேட்டிகளைப் பார்த்து எந்த ஒரு சிறு முயற்சியையும் இந்த விஷயம் தொடர்பாக எடுக்கவில்லை. 'சும்மா பேருக்கு, ஒரு பயனுமேற்படாத ஒரு விஷயத்துக்கு, எந்த முயற்சியையும் முன்னெடுக்க முன்வராத இந்த சமுதாயத்துக்கு கருத்து சொல்வதே வீண்.

ஐந்து வயதுமுதல் பத்து வயதுவரையுள்ள குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் பாலியல் கல்வி, 'தன் உடலின் எந்த உறுப்புகளைப் பிறர் தொட அனுமதிக்கலாம், எதையெல்லாம் அனுமதிக்கக் கூடாது' என்பது மட்டுமே. இதன் நோக்கம் அந்தக் குழந்தைகள் யாராலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மட்டுமே. வயதுக்கு வரக் கூடிய பருவத்தில், குறிப்பாக அவர்கள் உடலின் எந்த உறுப்பில், எதிர்பாலினரின் எந்த உறுப்பால் என்ன செய்யக்கூடாது, அவ்வாறு செய்து குழந்தை உருவாகிவிட்டால் அதனால் அந்தப் பெண்ணின் உயிருக்கும் உடலுக்கும் என்ன பாதிப்பு, அந்த ஆணுக்கு என்ன நெருக்கடிகள் என்பனவற்றையெல்லாம் இருபாலருக்கும் கற்றுத்தருவது மட்டுமே இங்கு நோக்கம்.

உடலுறவு கொண்டால் குழந்தை உண்டாகிவிடக் கூடிய உடல் தகுதியுடனிருக்கும் ஓர் ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் இந்த வயதில் இவற்றைக் கற்றுத்தராவிட்டால், பிறகு எப்போது கற்றுத்தரப் போகிறீர்கள்? தயங்கித் தயங்கி, நீங்கள் தள்ளிப்போட்டுக் கொண்டேயிருப்பீர்கள். ஆனால், அவர்களது கைகளிலிருக்கும் ஊடகங்கள் எந்தவிதத் தயக்கங்களுமின்றி அவர்களின் உடல் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் வேலைகளை மிகச் சரியாக, அவர்களின் சரியான வயதில் செய்துவிடும். உங்கள் குழந்தைகளின் உடலில் சுரக்க வேண்டிய ஹோர்மோன்களும் எந்தத் தயக்கமுமின்றி சரியான வயதில் சுரந்துவிடும். நீங்கள் கற்றுத்தருவதற்குள் அந்தக் குழந்தை கர்ப்பமாகிவிட்டால், அதன் பின்விளைவுகளை சந்திக்க நீங்கள் தயாரா?

அந்தக் காலத்திலெல்லாம் என்று பழைய கதையை ஆரம்பிக்காதீர்கள். அந்தக்காலத்தில் வயதுக்கு வரும் முன்பே திருமணம் செய்துவைத்துவிடுவார்கள். இது ஒருவிதத்தில் அந்தப் பெண் குழந்தையை வேறு யாரும் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளும் சூழலை தடுத்து அவளுக்குப் பாதுகாப்பளித்தது என்றாலும், மிகவும் மோசமான பின்விளைவுகளும் இருக்கத்தான் செய்தன. குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தாமல், சிறு வயதில் கருவுற்ற எத்தனைப் பெண்குழந்தைகள் பிரசவத்தின்போது இறந்திருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அப்போது வேறு விதத்தில் தவறிழைத்துக் கொண்டிருந்தோம். இப்போது இன்னொரு விதத்தில்.

தகுந்த உடல் வளர்ச்சியடைவதற்கு முன்னால் கரு உண்டாகிவிட்டால் அதனால் இவ்வளவு பிரச்சினைகள் வரும். உயிர் போகுமளவுக்கு வலியும், சமயத்தில் உயிரே போய்விடும் அபாயமுமிருக்கிறது என்பது தெரிந்திருந்தால் அந்தப் பெண்கள் நிச்சயமாக அதற்கு உடன்பட்டிருக்க மாட்டார்களில்லையா? அந்த வயதில் குழைந்தையை சுமப்பதும் பெற்றுக் கொள்வதும் கூட அவர்களின் உடலுக்கும் உயிருக்கும் ஆபத்துதான். அதன் பிறகு எப்படி வாழ்க்கையை நகர்த்துவார்கள்? இது ஒரு மிகப்பெரிய இடியாப்பச் சிக்கல் பிரச்னைதான் அந்தப் பெண்ணுக்கும், அவளது குடும்பத்துக்கும்.

நிச்சயமாய் அதில் பெரும்பாலான பெண்கள் உடலுறவு என்பதே என்னவென்று தெரியாமல் ஓர் உணர்ச்சி நிலைக்குத் தூண்டப்பட்டவர்களாகவோ அல்லது வன்புணர்வு செய்யப்பட்டவர்களாகவோதான் இருப்பார்கள். ஆனால், அதற்குக் காரணமான ஆண்கள் சீனுக்கே வருவதில்லை. அவர்களுக்கு அவமானம், உடல் வலிகள், உயிருக்கு ஆபத்து, அசிங்கமான வார்த்தைகளைக் கேட்கும் அவசியம் என எதுவுமே இல்லை. எந்தவித தண்டனையும்கூட கிடையாது. கேட்டால், வெளியே சொன்னால் பெண்ணின் மானம் போய்விடும் என்பார்கள். இவ்வளவு அவமானமும் உயிருக்கு ஆபத்தும் உங்கள் பெண் குழந்தைகளுக்கு ஏற்படலாம், அது தவறில்லை. அசிங்கமில்லை. ஆனால், இப்படி நடந்து கொண்டால் உனக்கு இவ்வாறு நடக்கும் என்று கற்றுக் கொடுப்பது அசிங்கம், ஆபாசம்- அப்படித்தானே?

பெரும்பான்மையான மக்களின் மனநிலையைப் பற்றிப் பேசிப் பயனில்லை எனும்போது, குறைந்தபட்சம் உங்கள் குழந்தைகளுக்காவது இவ்விஷயங்களை எடுத்துச்சொல்லி, அவர்கள் உயிரையும் மனநலனையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இப்போதிருக்கும் காலகட்டத்தில் இன்னும் உடல்ரீதியிலான ஈர்ப்பைத் தூண்டும் ஊடகங்களும் அவற்றைச் செயற்

படுத்திப் பார்க்கக்கூடிய வசதியுமிருப்பதால், அந்தக் காலத்தைவிட இப்போதிருக்கும் குழந்தைகளுக்குத்தான் பாலியல் குறித்த விழிப்புணர்வு அவசியம். உணவுப் பழக்கம், வாழ்க்கைமுறை உள்ளிட்ட காரணத்தினால் தற்போதுள்ள பெண் குழந்தைகளின் உடல் வளர்ச்சி அபரிமிதமாயிருக்கிறது. அவர்கள் பூப்படைவதும் மிக விரைவாகவே நடந்து விடுகிறது. 'எப்படி உடலுறவு வைத்துக்கொள்ள வேண்டும், என்று நீங்கள் அக்குழந்தைகளுக்குக் கற்றுத்தரப் போவதில்லை. என்ன செய்யக்கூடாது, அப்படி செய்தால் என்ன பின்விளைவுகள் அவர்களுக்கு ஏற்படும் என்பதைத்தான் நீங்கள் கற்றுக்கொடுக்கப் போகிறீர்கள். அதுவும் தினசரி அல்ல, சில மாதங்களுக்கொரு முறை ஞாபகப்படுத்தினாலே போதும். அடுத்தது, திருமணத்துக்குத் தயாராகயிருக்கும் வயதினருக்குக் கொடுக்கக் கூடிய பாலியல் கல்வி என்பது முற்றிலும் மாறுபட்டது பாலியல் உறவு குறித்த சந்தேகங்களுக்கு பதில்களையும் ஒருவேளை அவர்கள் சிறு வயதில் வன்புணர்வுக்கு உள்ளாகியிருந்தால், அந்த பாதிப்புகளிலிருந்து வெளியே வந்து அவர்கள் எந்தவித அச்சமுமில்லாமல் திருமண உறவுக்குள் நுழைய வழிகாட்டுவதும்தான் இந்த வயதினருக்கானபாலியல் கல்வியின் பொருள். சொல்லப்போனால், பதின்வயதினருக்குக் கற்றுத்தரப்பட்டவற்றுக்கு நேர்மாறானது. உங்கள் துணைவருடன் உடலுறவு வைத்துக் கொள்ள பயப்படாதீர்கள். எப்படி சரியான முறையில் குழந்தைப் பிறப்பைத் தள்ளிப்போடுவது, ஒருவேளை நீங்கள் எதிர்பாராத நேரத்தில் திருமணத்துக்குப் பிறகு குழந்தை வந்துவிட்டால், அந்தக் கருவைக் கலைப்பது எவ்வளவு ஆபத்தானது போன்ற விஷயங்களைக் கற்றுத்தருவதுதான் அந்த வயதினருக்கான 'பாலியல் கல்வி'.

உங்கள் கருவில் உருவாகிவிட்ட ஒரு குழந்தையை வேண்டாமென்று நீங்கள் நினைப்பதும் வெறுப்பதுமே அந்தக் குழந்தைக்கு என்ன விதமான பாதிப்புக்களை ஏற்படுத்தும், எப்படி அந்த சூழலைக் கையாளலாம், உங்கள் கணவனின் மனநிலையை எப்படி புரிந்து கொள்வது, வேலை, பொருளாதாரம் போன்றவை எப்படி உங்கள் இல்லற வாழ்க்கையின் மகிழ்ச்சிக்குக் காரணமாயிருக்கும் என்பன உள்ளிட்ட பல விஷயங்கள் அடங்கியதுதான் திருமணத்துக்கு முந்தைய 'பாலியல் கல்வி' (ீசநஅயசவைையட ளநஒ நனரஉயவழைெ ழச ளநஒ உழரளெநடடபைெ).

திருமணமான தம்பதிகளுக்கு பொதுவான, பாலுறவு தொடர்பான விஷயங்களைக் கற்றுத்தருவதாயில்லாமல் பெரும்பாலும் அவர்களிருவருக்குமிடையேயான உடலுறவில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான சரியான தீர்வுகளைக் கொடுப்பதுதான் அவர்களுக்கான 'பாலியல் கல்வி'யின் நோக்கமாகயிருக்கும்.

'பாலியல் கல்வி' என்ற சொல் ஒன்றுதான் என்பதற்காக இந்த அனைத்து வயதினருக்கும் கொடுக்கக்கூடிய பாலியல் கல்வியின் உள்ளடக்கமும் ஒன்றுதான் என்று புரிந்து கொள்வது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்? அந்த முட்டாள்தனத்தைத்தான் நாம் காலம்காலமாய் செய்துகொண்டிருக்கிறோம்.

திரைப்படம் என்பது எவ்வளவு பெரிய சக்திவாய்ந்த ஓர் ஊடகம்? அந்த ஊடகத்தில் இந்த ஒவ்வொரு வயதினருக்குமேற்றபடி அவர்கள் மட்டும் பார்க்கும்படியாக, அவர்களுக்குப் பயன்படும்படி பாலியல் கல்வியைக் கொடுத்தால் இந்த சமூகத்தில் எவ்வளவு பெரிய மாற்றம் ஏற்படும் தெரியுமா? பாலியல் உணர்வுகளைத் தாறுமாறாய் தூண்டிவிடும் வேலையை செய்யும் நம் தமிழ்த் திரைப்படங்கள், பாலியல் கல்வியைக் கொடுப்பதில்லை. மேற்கத்திய நாடுகளிலிருக்கும் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோரே அந்த வேலையைச் செய்துவிடுகின்றனர். நம் சமூகத்தில் பெற்றோரும் அதைச் செய்வதில்லை, சொல்லப்போனால் அவர்களுக்கே பெரும்பாலான விஷயங்கள் தெரிவதில்லை. சரியான உள்ளாடைகளைத் தேர்ந்தெடுத்து அணியத் தெரியாமலும் மாதவிடாய் காலங்களில் எப்படி தங்கள் அந்தரங்க உறுப்புக்களைப் பரமாரிப்பது என்பது கூடவும் தெரியாமல்தான் நம் குழந்தைகள் வளர்கிறார்கள். திரைப்படம், குறும்படம், தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகள் இவை எதுவுமே பாலியல் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து எடுக்கப்படுவதில்லை. குறைந்தபட்சம் ீளுயு என்று சொல்லப்படும் இரண்டு நிமிடங்களுக்குள் எடுக்கப்படும் சமூகநலனிற்காக வெளியிடப்படும்ீரடிடனை ளுநசஎஉைந யுறயசநெளள படங்களைக்கூட எடுக்க முடியாத அளவுக்கு நமது திரைப்படத்துறை அசிரத்தையாயிருக்கிறது.

தமிழில் வெளிவந்துள்ள ஒரு நல்ல பாலியல் வழிகாட்டித் திரைப்படம் என்று சுட்டிக்காட்டும்படியாக ஒன்று கூட இல்லை என்பதுதான் உண்மை.

குழந்தைகளுக்கு நல்ல தொடுகை, கெட்ட தொடுகை புழழன வழரஉா, டீயன வழரஉா என்று சொல்லித்தருகிறோமேயொழிய, எந்த இடத்தில் தொட்டால் கெட்ட தொடுகை என்று கூட சொல்லித் தருவதில்லை. அவர்களுக்கு நீங்கள் பேசுவது புரிய ஆரம்பிக்கும் வயதிலேயே, "சிறுநீர் போகுமிடம், மலம் கழிக்குமிடம் மற்றும் மார்பு, இவற்றை யாரையும் தொட விடாதே. உன் உதடுகளில் முத்தம் கொடுக்க யாரையும் அனுமதிக்காதே" என்று நேரடியாக தெளிவாகவே சொல்லி விடுங்கள்.

மேற்கத்திய நாடுகளைப் போல் உதடுகளில் முத்தம் கொடுப்பது அன்பின் வெளிப்பாடு என்ற மனநிலை இங்கே பெரும்பாலானோருக்கு இல்லை. காமத்தின் வெளிப்பாடாகத்தான் முத்தத்தை இங்கே பலரும் பார்க்கிறார்கள். யாராவது விதிவிலக்குகள் இருக்கலாம். பரவாயில்லை, உங்கள் குழந்தை தடுத்தால் அவர்களும் அதைச் சரியாகப் புரிந்து ஏற்றுக்கொள்ளட்டும்.

அந்தவயதில் குழந்தைக்குப் புரியும்படி ஒரு பொதுவான விதியைத்தான் கற்றுத்தர முடியுமேயொழிய, யார் நல்லவர்கள், யார் கெட்ட எண்ணத்துடன் அணுகுகிறார்கள் என்றெல்லாம் பகுத்தாய்வு செய்வது எப்படி என்று உங்கள் குழந்தைக்குக் கற்றுத்தந்து அவர்களைக் குழப்ப முடியாது. அதனால் மேலே சொன்னபடி தெளிவாக, சுருக்கமாக அந்த மூன்று இடங்களை யாரையும் தொடவிடாதே. உதட்டில் முத்தம் தர அனுமதிக்காதே என்று மட்டும் சொல்லிக்கொடுங்கள். உங்கள் குழந்தைக்குப் பத்து வயதாகிவிடும்போதே "ஆண், பெண் அந்தரங்க உறுப்புக்களைத் தொட்டால் பெண்ணுக்குக் குழந்தை பிறந்துவிடும். அவ்வளவு சிறிய வயதில் ஒரு சிறுமிக்குக் குழந்தை பிறக்கக் கூடாது. அது அவளது உயிருக்கே ஆபத்து. அந்த சிறுவனுக்கும் தண்டனை கிடைக்கும்" என்று மட்டும் சொல்லிக்கொடுங்கள். நிச்சயமாய் புரிந்து கொள்வார்கள். பெண் குழந்தைகள் வயதுக்கு வந்தவுடனேயே ஓர் ஆண் இப்படிச் செய்வதால் பெண்ணுக்குக் குழந்தை பிறந்துவிடும் என்று சொல்லிக்கொடுங்கள். பதின்மூன்றிலிருந்து பதினைந்து வயதுக்குள்ளேயே ஒரு ஆண்குழந்தைக்கும் இதே விஷயத்தை சொல்லிக்கொடுங்கள். கர்ப்பப்பை திடமாக இல்லாத அந்த வயதில் ஒரு பெண்ணுக்குக் கருவைத் தாங்கும் சக்தியிருக்காது என்றும், அதனால் அவளது உயிருக்கே ஆபத்து ஏற்படுமென்றும், கருக்கலைப்பிலிருக்கும் ஆபத்துக்களையும் சொல்லிப் புரிய வையுங்கள். ஆண், பெண் இருபாலருக்கும் இந்தப் புரிதல் மிக மிக அவசியம்.

ஒருவேளை உங்களுக்கு உங்கள் குழந்தைகளிடம் இவற்றைப்பற்றிப் பேசக் கூச்சமாயிருந்தால், பதின்மூன்று வயதில், பதினெட்டு வயதில், திருமணத்துக்குத் தாயாராகும் வயதில் என இந்த மூன்று நிலைகளிலும் ஒரு உறவு மேம்பாட்டு நல ஆலோசகரிடம் அழைத்துச் சென்று இவற்றைப் புரியவைக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள். திருமணம் முடிவானதுமே, உறவுகள் மேம்பாட்டு நல நிபுணர் ஒருவரை சந்திக்க அந்தத் தம்பதியை அனுப்பி வையுங்கள். திருமணத்துக்கு முந்தைய உறவுகள் மேம்பாட்டு ஆலோசனை, திருமண உறவுக்கு அந்த ஆணும், பெண்ணும் தயாராகும் 'திருமண முன்தயாரிப்பு பயிற்சி வகுப்புக்கள்' (ஆயசசயைபந ீசநியசயவழைெ உழரசளந) கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மதம் தொடர்பாக இல்லாமல் உளவியல் ரீதியிலான தயாரிப்புப் பயிற்சி இது. இந்த வகுப்பை மாப்பிள்ளையும் பெண்ணும் ஒரே ஊரிலிருந்தால், சேர்ந்து வந்து பங்கேற்க வேண்டும். வெவ்வேறு ஊர்களிலிருந்தால் அவரவர் ஊர்களில் தனியாக சென்று பயிற்சியை முடித்து சான்றிதழ் வாங்கியாக வேண்டும். எந்த நாட்டில் அவர்கள் இருந்தாலும் சரி. அப்போதுதான் கிறிஸ்தவ முறைப்படி அவர்களால் திருமணம் செய்து கொள்ளமுடியும்.

இதை மற்ற மதங்களிலும் கட்டாய முறையாகக் கொண்டு வரலாம். திருமண உறவில் பிளவுகளைத் தடுக்கும் ஒரு முயற்சியை எந்த மதத்தினர் பின்பற்றினால் என்ன? நல்ல விஷயம் எங்கிருந்தாலும் நாம் அவற்றை எடுத்துக் கொண்டு பின்பற்றலாமே? இப்படி செய்தால் 100 சதவீதம் அவர்கள் திருமண உறவில் பிரச்னைகளே வராது என்ற உத்திரவாதமில்லையென்றாலும் ஒன்றும் தெரியாமல் ஒரு உறவில் நுழைவதை விட, ஓரளவுக்கு ஒரு புரிதலுடன் திருமண பந்தத்துக்குள் நுழைவார்கள். பிரச்சினைகள் வந்தாலும் அந்த இருவரில் யாராவது ஒருவராவது அதைச் சரிசெய்ய முயல்வார்கள். குறைந்தபட்சம் அந்த வகுப்புக்களில் அவர்கள் சொல்லும் உண்மைக்கதைகளை கேட்கும்போது, குறைந்தபட்சம் திருமண வாழ்வென்பது கற்பனைகளிலும் கதைகளிலும் வருவதைப் போல மகிழ்ச்சி மட்டுமே நிறைந்ததல்ல, அதில் பிரச்சினைகளும் வரக்கூடும் என்ற மனநிலையுடன் அந்த பந்தத்துக்குள் நுழைவார்கள்.

மணமகன், மணமகளின் பெற்றோரும் இப்போது தனித்துவமான ஆலோசனைப் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தங்கள் பிள்ளைகளின் திருமணத்துக்குப் பிறகு தாங்கள் எவ்வாறு அவர்களிடமும் அவர்கள் வாழ்க்கைத்துணையிடமும் நடந்து கொள்ளவேண்டும், அவர்களுக்குள் ஏதாவது பிரச்சினைகளோ அல்லது கருத்து வேறுபாடுகளோ ஏற்பட்டால் அவற்றை எப்படிச் சரிசெய்வது, அந்தத் திருமண உறவைத் தக்கவைக்க அவர்களின் பங்கு என்ன என்பனவற்றையெல்லால் அவர்களுக்குப் புரியவைப்பார்கள்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2025இல் வெளியிடப்பெற்றது.